
பொக்கிஷம் தேடிய
பிசாசு!
லயன்
காமிக்ஸ்
ப்ளஸ்
மின்னல்
மனிதன்
சாகஸம்


மினி லயன்
காசில்லா
கோடீஸ்வர
விரைவில் வருகிறது..!
முற்றிலும் மாறுபட்ட சித்திரக் கதை!
வழக்கமான துப்பறியும் கதையல்ல இது

## ஹாட்-லைன்!

லயன் ரசிகர்களே!

ரூ. 5000/- பரிசுப் போட்டியில் இறுதிக் கட்டத்திற்கு வந்து விட்டோம். இந்த இதழின் பின்னட்டையிலுள்ள 'ஈகிள்மேனின்' படத்தை லயன் ஆல்பத்தில் ஒட்டினால் ஆல்பம் பூர்த்தியடைந்து விடும்! ஆல்பத்தின் பின்பக்கம் உங்களின் முழு முகவரியையும் எழுதி எங்களுக்கு 30-9-91 க்குள் கிடைக்குமாறு அனுப்புங்கள்!

குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் 10 வாசகர்களுக்கு தலா ரூ. 500/- பரிசு வழங்கப்படும்! பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளின் விபரம் நவம்பர் மாத இதழில் வெளிவரும்!

அடுத்த மாதம் **"Operation அலாவுதீன்"** என்ற வித்தியாசமான பெயருடன் ரிப்கிர்பியின் **முழுநீள** சாகஸம் வரயிருக்கிறது! கிணறு வெட்ட பூதம் கிளம்பியது போல - புராதன விளக்கொன்றை ரிப் வாங்க, அதிலிருந்து முளைக்கிறது பூதாகரமான பிரச்சனை! பட்லர் டெஸ்மாண்டின் துணையுடன் அரேபியாவில் ரிப் செய்யும் சாகஸங்களை ரசிக்கத் தவறாதீர்கள்!

நவம்பர் மாதம் **"லயன் தீபாவளி மலர்"** டெக்ஸ் வில்லரின் சாகஸத்தோடு வரயிருக்கிறது!

அடுத்த இதழில் அதைப் பற்றிய விபரங்களை எழுதுகிறேன்!

அன்புடன்,

எஸ். விஜயன்




ரிப் கிர்பி நியூயார்க் நகரில் ஒரு பிரபல துப்பறிவாளர்! செயல் வேகமும், அதீத விவேகமும் கொண்ட திறமையான மனிதர் அவர்! மணமாகாத இவருக்குத் துணை பட்லர் டெஸ்மாண்ட் தான்! இருவருமாக எதிர்பாரா பல் ஆபத்துக்களை முறியடித்து வெற்றிகள் ஈட்டுவதில் வல்லவர்கள்!

இணை பிரியா இந்தப் புதிரான ஜோடியின் புதிய சாகஸம் ஒன்று தான் "பொக்கிஷம் தேடிய பிசாசு"!



என்னுடைய ஆடையலங்காரம் எப்படியிருக்கிறது டெஸ்மாண்ட்?
ஹ்ம்ம் சொன்னால் கோபித்துக் கொள்ளக் கூடாது! அது சரி- எங்கே கிளம்பிட்டீங்க?
டின்னருக்கு என்றால் அதற்கு இதுவல்ல நேரம்! பின்னே-?
நிச்சயமாக பார்ட்டிக்கு இல்லேன்னு தோணுது!
மறந்து விட்டாயா?
இன்றைக்கு எங்களோடு கோல்ஃப் கிளப்பின 75 ஆண்டு நிறைவு விழா சம்பந்தப்பட்ட போட்டி நடக்கப் போகிறது!
வெரிகுட்! நீங்கள் வெற்றி பெற என் நல்வாழ்த்துக்கள் ஸார்!
ஊஹூம்-! இந்த அடி தப்பு. முதல் பரிசை வேறு யாரோ தட்டிக்கொண்டு போகப் போகிறார்கள்!
இரண்டாவது பரிசுதான் ரிப்பிற்குக் கிடைத்தது!
இதை தேடிப் பிடித்து வாங்க அவர்களுக்கு நிச்சயமாக பூதக் கண்ணாடியின் உதவி தேவைப்பட்டிருக்கும்!
ஒரு டிடெக்டிவ்க்கு ஏற்றதுதான்! கமான் ரிப்! உங்களுக்கு உற்சாகமூட்டும் சங்கதி ஒன்று சொல்கிறேன்!


போரடித்துவிட்ட இந்த கால்ஃப் சம்பந்தப் படாத சங்கதி எதுவானாலும் இப்போது நான் கேட்கத் தயார்-சொல்லுங்கள்!
என்னுடைய பொழுதுபோக்கு என்னவென்று உங்களுக்கும் தெரியுமல்லவா?
ஸ்பானிஷ் மெயினில் நிறைய தங்கத் தோடு மூழ்கிப்போன "அமோரிடா" கப்பலின் இருப்பிடத்தை சரியாக நிர்ணயிக்க முயற்சித்து வருகிறேன்!
ஆனால், என் முயற்சிகளுக்கு இடையூறாக "தங்கப்பிசாசு" கப்பல் வந்து குறுக்கிடுகிறது-ஒவ்வொரு தடவையும்!
"தங்கப் பிசாசு"-? நான் கேள்விப் பட்டதேயில்லையே?
அந்தக் கப்பலுக்கு அல்லது அந்த மாயத் தோற்றத்திற்கு அப்பகுதி மக்கள் இட்ட பெயர் அது!
கப்பலில் கொடி எதும் கிடையாது! செய்தி சமிக்ஞைகள் எதற்கும் மறு மொழி தருவதும் இல்லை!
அதன் தோற்றமே என் ஊழியர்களை பீதியடையச் செய்து விடுகிறது-



அந்நாள்'ல் பேசப்பட்டு வந்த 'ஃப்ளையிங் டச்மேன்' கப்பலை நினைவூட்டுகிறது இந்த 'தங்கப் பிசாசு'
அந்தப் புதிரும் இன்றுவரை விடுபடாமல் தானே இருந்து வருகிறது!
தன்னிடம் விசுவாசமாக இருக்கக்கூடிய ஒரு பெண்ணை தேடி காலம் காலமாக கடலில் அலைந்தான் அந்த டச்சு காப்டன் என்று சொல்வார்கள்!
கடல் அலை மீது எவள் உட்கார்ந்து கொண்டிருப்பாள் என்று அறிய வேண்டாமா?
ஒருவேளை 'கடல் கன்னி' தென்படலாம் இல்லையா?
ஹலோ-ஸ்யூ!
ஸ்யூ-இவர்-ரிப் கெர்பி! பிரபல டிடெக்டிவ்! ரிப்-இவள் என் மருமகள்-ஸ்யூ பார்ன்ஸ்!
நலமா-ஸ்யூ?
ஹலோ-ரிப்! காலம் காலமாக கடலில் அலைந்து திரிந்த அந்த முட்டாள் காப்டனைப் பற்றிய மற்ற விவரங்களைச் சொல்லுங்கள்.
அம்மோரிடா' கப்பலை தேடும் குழுவில் நானும் பங்கேற்க வேண்டும் என்று அங்கிள் வற்புறுத்துகிறார்!
வா-நடந்து கொண்டே பேசலாம்!


நானும் குழுவில் இருந்தால் வெற்றி பெறுவது சுலபமாக இருக்கும் என்று நம்புகிறார்!
வேடிக்கை தான்!
அந்த பிசாசுக் கப்பலின் காப்டன் உன்னைக் கண்டதும் சொக்கிப் போகலாம்!
நான் தேடும் பெண் இவள் தான் என்று தன் நெடிய பயணத்தை முடித்துக் கொண்டுவிடலாம்!
ஹால்! நானும், ஸ்யூவும் 'அமோரிடா'வை தேடும் பணியில் உங்களுக்கு உதவ தீர்மானித்திருக்கிறோம்!
திண்டலா-? நீங்களும் குழுவில் சேர்ந்து கொள்வதானால் நானும் ரெடி- ரிப்!
க்ரேட்-ரிப்! 'பிசாசுக் கப்பலை'க் கண்டு நடுநடுங்காத ஒரு நபர் குழுவில் இருக்கப்போவது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது!
நம்பிக்கைக்குரிய வேறு எவரேனும் இருந்தாலும் அழைத்து வாருங்கள் அடுத்த முயறசி இன்னும் சில தினங்களில் தொடங்கவிருக்கிறது!
டெஸ்மாண்ட் பிசாசுகளோடே சண்டை என்று வந்தால் நீ எப்படி?
பிரச்னையே இல்லை ஸார்! என் டஸ்ட்டரால் சுலபமாக அவற்றை அழித்து விடுவேன்!


அதன் பின் சில நாட்கள் கழித்து ஹாலின் கப்பல் தெற்கு நோக்கி பயணமாகியது-
கடைசி முயற்சியின்போது, அமோரிடா கப்பலின் சிதிலங்கள் இந்த இடத்தில் இருக்கலாம் என்று கணிக்க முடிந்தது, ரிப்-!
அதிக ஆழமில்லாத இடம் என்றுதானே வரைபடம் சொல்கிறது! காரியத்தை முடித்திருக்க வேண்டியதுதானே?
நீர்மூழ்கி உதவியாளர்கள் 'தங்கப் பிசாசை'க் கண்டு மிரண்டு விட்டார்கள்! அவர்களுக்கு பதிலாக வேறு சில புதிய உதவியாளர்களை தேட வேண்டி வந்தது!
அதோ தெரிவது ஸ்வேர்ட்ஸ் பாயிண்ட், ரிப்! அங்கே போய் எரிபொருளும், உணவுப் பொருளும் சேகரித்துக் கொண்டு பயணத்தை தொடருவோம்!
பேய், பிசாசுகளில் நம்பிக்கை இல்லாத சில நீர்மூழ்கி உதவியாளர்களையும் தேடவேண்டும்- இல்லையா?
வந்த வேலை முடிந்தது! வா- பருக ஏதாவது கிடைக்குமா என்று பார்ப்போம்!
நல்ல யோசனை!
திரும்பவும் வந்துவிட்டானா?


அந்த ஆள்-ஹால்தானே-காப்டன் ஸ்லாக்? அமோரிடாவை தேடுவதை கைவிட்டிருப்பான் என்றல்லவா நினைத்தேன்.
நானும்தான்-ப்ளின்ட்!
இம்முறையும் அவன் வெற்றி பெறப்போவதில்லை! அமோரிடா எனக்கே சொந்தம்! அதன் சவக்குழியை விரைவிலேயே கண்டுபிடிப்பேன்!
கும்!
அதோ-அந்த இரண்டு பேரைக் கவனித்தீர்களா ஹால்? வெட்டிப் பயல்களாட்டம் நிற்கிறான்கள்!
ஏற்கனவே அவர்களைத் தெரியும் ரிப்! சரியான சிடுமூஞ்சிப் பயல்கள்!
வேலை கொடுத்தால் செய்ய மாட்டார்கள் என்று நினைக்கிறீர்களா?
ஊர் சுற்றியலையும் போக்கிரிகள்! அவ்வப்போது எதையாவது கடத்தி வயிறு வளர்க்கும் வம்புப் போவழிகள்! நமக்கு பயன்பட மாட்டார்கள்!
கடைசியாக இவன் இங்கே வந்திருந்தபோது ஏதோ முக்கியமான தடயங்களைக் கண்டுபிடித்திருந்தான என்று நினைக்கிறேன் காப்டன்! அதனால்தான் திரும்பவும் வந்திருக்கிறான!
அது நிஜமாக இருந்தால் அவனுக்கோ-அவன சகாக்களுக்கோ நேரம் சரியில்லை என்று அர்த்தம்!


ஹலோ மிஸ்டர் ஹால்-என் பெயர் ஸ்லாக்! அமோரிடாவை தேடும் முயற்சியாக இங்கே வந்திருக்கிறீர்கள்-இல்லையா?
யெஸ்-காப்டன் ஸ்லாக்! உங்களுடைய ஆட்கள் எவருக்கேனும்எக்ஸ்ட்ரா வேலை செய்து காசு சேர்க்கும் எண்ணம் இருக்கிறதா?
அவரவர் வேலையை செய்ய வைப்பதே பெரும்பாடாக இருக்கிறது-போங்கள்! அப்படி யாரேனும் கிடைத்தால் கட்டாயம் அனுப்பி வைக்கிறேன!
நட்புணர்வு வழிகிறது-என்ன விஷயம் காப்டன்?
சும்மா ஒரு நாடகம் அவ்வளவு தான்!
பின்னர் ஒரு தீவை நோக்கிபடகில் விரைந்தார்கள்.
அவனை பொக்கிஷத்திற்கு எவ்வளவு நெருக்கத்தில் செல்ல அனுமதிக்கப் போகிறீர்கள் காப்டன்?
அதை தேடும் கஷ்டத்தை நமக்கு அவன் மிச்சம் வைக்காத அளவுக்கு!
அதற்கிடையே, அவர்களை மிரண்டு ஓடச் செய்ய நம் பிசாசுக் கப்பலை தயார் நிலையில் வைப்போம்!


இந்தக் கப்பலை சினிமா படப்பிடிப்புக்காக நிர்மாணித்த ஆள், எப்படி அது திடீரென்று மாயமாக மறைந்தது என்று இன்னமும் திணறிக்கொண்டிருக்கிறான்!
அதைக் கொண்டு அவன் சம்பாதிக்கும் பணத்தைவிட பலமடங்கு கூடுதலாக நாம் சம்பாதிக்கப் போகிறோம்!
மறுநாள்-
கும்மாளம் போட்டது போதும் தம்பிகளா- எழுந்திருங்கள்!
நம் 'வாடிக்கையாளர்' மீண்டும் இங்கே வந்து கொண்டிருக்கிறார்!
அமோரிடமா எங்கே கிடக்கிறது என்று அந்த ஆளுக்குத்தான் தெரியும்! பொக்கிஷத்தை நாம் முந்திக் கொண்டு கைப்பற்ற வேண்டும்!
இந்த இடம்தான் ரிப்-! என் கணிப்பு சரிதானா என்று கீழேபோய் சோதிக்க வேண்டும்!
ஓ-கே நான் ரெடி!
கப்பலை என் பொறுப்பில் விட்டு-விட்டு எல்லோரும் போய்விட்டார்கள்-ஏனோ எனக்கு நடுக்கமெடுக்கிறது!


கடல் படுகையில் தேடும் படலம் தொடங்கியது-
மிஸ் ஸ்யூ-! அ-அ-து என்ன?
த-தங்கப் பிசாசு! கப்பல்
நி-நிஜம்தானா-நான்-காண்பது?
கடலினுள் இருந்தவர்களுக்கு அந்தக் கவலை எல்லாம் இல்லை!


பீதியடைந்த ஊழியர்கள் தப்பித் தால் போதும் என்று நீரினுள் பாய்ந்தார்கள் -
அதே சமயம்-ரிப்பும், ஹாலும் மேலேறத் தொங்கினார்கள் -
முழ்கிக் கொண்டிருக்கும் கப்பலிலிருந்து வெளியே றும் எலிகளைப் போல என்னமாய் பாய்கி றார்கள் பார்!
எதிர்பார்த்த பலன் கிட்டி விட்டது!
அம்மாடி - வந்து விட்டார்களா!


இதை சுத்தப்படுத்திப் பார்த்துவிட்டால் தெரிந்துவிடும் நாம் பொக்கிஷத்தின் இருப்பிடத்தை தொட்டு விட்டோமா இல்லையா என்று!
அந்த பிசாசுக் கப்பல் நெருங்கி வந்து பீரங்கியால் ஒருமுறை சுட்டது!
நீங்கள் கீழே இருந்தபோது இங்கே நடந்த விபரீதம் என்ன தெரியுமா?
அந்தப் பயந்தாங் கொள்ளிகள் மூழ்கிவிடுமுன் ஒரு படகை கீழே இறக்குங்கள்!
அந்த பிசாசுக் கப்பல் சமாச்சாரம்-
எங்களுக்கு மேலே ஒரு கப்பல் செல்வதைக் கண்டோம் ஸ்யூ! ஆனால் அது பிசாசுக் கப்பலாக இருக்க முடியாது!
அதன் அடிப்பாகம் புத்தம் புதிதாக இருந்தது-ஏதோ ஏமாற்று வேலை இது!
நாங்கள் கொண்டு வந்ததை ஆராய்ந்து பார்ப்போம்-வா! தெரிய வரும் உண்மை-
எதிரிகள் யார், அவர்கள் நோக்கம் என்னவென்று விளக்கம் தரலாம்!


இழைக்க, இழைக்க வெறும் கசடாகத் தான் வந்து கொண் டிருக்கிறது!
அதற்குள் மனம் தளர்ந்து விட்டால் எப்படி?
ஹாய்ய்- இங்கே பாருங்கள்! தங்கப் பாளம்
முடிவில் பொக்கிஷக் கப்பலைக் கண்டு பிடித்துவிட்டோம்! என நீண்ட நாள் முயற்சி வீண் போகவில்லை!
AMORIT
பாராட்டுக்கள்-ஹால்!' பல மில்லியன்களுக்கு அதிபதியாகி விட்டீர்கள்!
'அமோரிடா' என்று பெயர் பொறிக்கப் பட்டிருக்கிறது!
அந்தப் பிசாசுக் கப்பல் 'என் பொக்கிஷத்தை திருப்பிக்கொடு' என்று கேட்காத பட்சத்தில்!
அது பிசாசுக் கப்பலே அல்ல!
முழுசு முழுசாக தடியன்கள். இருக்கும் கப்பல்!
இந்த ரைபிள் அவர் களுக்கு பாடம் புகட்டும்!


ரிப்! கீழே உள்ள புதையலை சேகரிக்க பல நாட்கள் பிடிக்குமே!
எதிரிகளை பக்கத்தில் வைத்துக் கொண்டு அந்த முயற்சியில் எப்படி வெற்றி பெற முடியும் என்ற தயக்கமா?
இது சர்வதேச கடல் பகுதி- யார் வேண்டுமானாலும் இங்கே நடமாடலாம்!
நம் 'பிசாசு' நாடகம் அவர்களிடம் பலிக்க வில்லை என்று தோன்றுகிறது!
இனியும் நீ இங்கே இருப்பது ஆபத்து ஸ்யூ!
நாம் வேறொரு யுத்தியை கையாளுவோம்!
இவ்வளவு தூரம் வந்துவிட்ட பிறகு கீழே என்னதான் இருக்கிறது என்று பார்க்காமல் திரும்புவதற்கு இஷ்டமில்லை எனக்கு!
அவள் இஷ்டப்படியே-


அந்த சினிமா கப்பலால் நமக்கு இனி எந்த பிரயோஜனமும் இல்லை ப்ளின்ட்!
காணாமல் போன அது நம் வசம் இருப்பது போலீஸுக்கு தெரிந்தால் ஜெயில் வாசம் நிச்சயம்!
தன் போக்கில் போக அதை கழற்றி விட்டு விடச் சொல்!
நீயும், இன்னொருத்தனும் ஹாலின கப்பலை சென்றடைய ஒரு சூழ்ச்சித் திட்டம் வகுத்திருக்கிறேன் ப்ளின்ட்!
ஆபத்தான பணி! போனஸ் கணிசமாக தருவீர்கள் அல்லவா?
நான் கீழே இருந்து எடுத்து வந்ததை சுரண்டிப் பார்ப்போம் வாருங்கள்!
இதுவும் தங்கமாகத் தானிருக்கும்!
ஹைய-ய்யா! அடிச்சேண்டா-லக்கி பிரைஸ்!
அடுத்த இரு தினங்களில் வாளிகளை கொண்டு போய் நிறைய அள்ளி வருவோம்!
நங்கூரத்தை மேலே ஏற்று!
அது தான் போக்கில் எங்கே வேண்டுமானாலும் போகட்டும்!



சூறாவளி வரும்போலிருக்கிறது! அந்த சக்கரத்தை சீக்கிரமாக கயிற்றால் பிணைத்துவிட்டு வா- இதிலிருந்து வெளியேறி விடுவோம்!
''பிசாசுக் கப்பலுக்கு'' விடுதலை கிடைத்தது...!
நீங்கள் சொன்ன மாதிரியே எல்லா வற்றையும் செய்து விட்டோம் காப்டன்!
அந்நாளைய கொள்ளைக் கப்பல் மாதிரியே இருக்கிறது அல்லவா?
இதை கட்டியவனுக்கு கற்பனை வளம் ஏராளம்!
இலக்கின்றி தான்தோன்றித்தனமாக இங்குமங்குமாக அலைந்தது அந்தச் சிறு கப்பல்-
பார்ப்பவர்களுக்கு அது நிச்சயம் 'ஃப்ளையிங் டச்மேன்' தான் என்று தோன்றும்!
அதை திருடி வந்த பழி இனி நம்மீது விழாது!
சரி, இதை விட்டுத் தள்ளு! அந்தப் பசங்களின் கப்பலுக்குப் போய்ச் சேருவது எப்படி என்று சொல்கிறேன்-சேள்!


அமோரிடாவை ஹால் கண்டு பிடித்திருக்
கும் பட்சத்தில் பொக்கிஷத்தை காப்பாற்
றிக் கொள்ள அவர் கடுமையாக
போராடக்கூடும்!
ஆனால் நாம் சாமார்த்தியமாக
அவன் முகத்தில் கரியைப்
பூசி விடலாம்!
இது-நாம் இருக்கும் இடம்!
ஹாலின் கப்பல் இங்கே
நிற்கிறது-
உருப்படியாக எதையோ அவன்
சாதித்திருப்பதாக தோன்றுகிறது!
நான் அவருடைய கப்பலை சென்றடை
வது எப்படி-உடம்பில் தோட்டா
பாயாமல்?
ஒரு ஓட்டைப் படகில் நீயும், ஜோவும்
போகிறீர்கள்! உயிருக்கு மன்றாடிக்
கொண்டிருக்கும் உங்களை கண்டும்
காணாமல் விட்டுவிடுவார்களா என்ன?
நாங்கள் நிறைய
நடிக்க வேண்
டும்-இல்லையா?
ஆமாம்! பட்டினியால்
உயிர் ஒடுங்கி வருவது
போல் நடிக்க வேண்டும்!
இங்கே
இப்படி
என்றால்-
அங்கே-
அஸ்தமனம்-
கொள்ளை
அழகு!
இயற்கையின் கை
வண்ணத்திற்கு ஈடு
இணை ஏது ஸ்யூ!



ஓட்டைப் படகில் போவது என்பது எனக்கென்னவோ சரியாகப் படவில்லை- இசகு பிசகாகி விட்டால்?
ஹால் உங்களை தன் கப்பலில் ஏற்றிக்கொள்வான், பிறகு அந்தக் கப்பலை நாம் சுலபமாக வசப்படுத்திக் கொள்ளலாம்- பொக்கிஷங்களோடு!
அமோரிடா பொக்கிஷம் மொத்தமும் நமக்கே சொந்தமாகிவிடும் அதிர்ஷ்டத்தை எண்ணிப்பார் ப்ளின்ட்!
அங்கே-
தங்கத்தை மேலேற்றும் பணி நாளை முதல் முழு வீச்சில் நடக்கும் என்று அங்கிள் சொன்னார்-
ஹால் பட்ட பாடு வீண்போகவில்லை!
அதையடுத்த தினங்களில் அமோரிடா தங்கம் பகுதி பகுதியாக மேலே கொண்டு வரப்பட்டது-
ஏறத்தாள பணி முடிவடையும் தருணத்தில்-
சின்ன துப்பாக்கிதான்- ஆனாலும் படு சுறு சுறுப்பு! உடையினுள் மறைத்து எடுத்துச் செல்ல வசதியானது!


ஹூம்-பீரங்கி தேவைப்படுகிற சந்தர்ப்பத்தில் இது எப்படி போதும்?
ஜோவிடமும் இதுமாதிரி ஒன்று இருக்கும்!-
ஹால் எங்களை மீட்கும் விநாடிவரை இந்த ஒடைசல் படகு தாங்குமோ என்னவோ?
வேறு வழி! பயலுக்குக் கொஞ்சம் கூட சந்தேகம் வரக்கூடாது!
உனக்கு கிடைக்கப் போகும் பங்கை நினைத்துப் பார்! நீந்தியே அவன் கப்பல் வரைப் போய்விடலாம்!
இந்தத் துப்பாக்கியை நீ எடுத்துப் போ!
எதற்கு ஆகும் இது? கொசுக்களை சுடவா?
இந்த துடுப்பை ஒடித்து எடுத்துக் கொள்வோம்-
அப்போதுதான் நம் நாடகம் நம்பும்படியாக இருக்கும்!


உடம்பிலும், உடையிலும் திட்டு திட்டாக அழுக்கை பூசிக் கொள் ளுங்கள்-பல தினங்கள் கடலில் அலைக்கழிக்கப்பட்டதாக நம்பச் செய்ய!
நம் தங்கத்தை ஹால் திருடிக்கொண் டிருக்கும் இடத்திற்கு இரண்டு மைல் தொலைவு வரை உங்கள் படகை நான் இழுத்துச் சென்று விடுகிறேன்!
அங்கிருந்து நீங்கள் துடுப்பு போட்டால் போதும்!
இதுதான் சுபயோகம் என்கிறது! சுத்தமான காற்று சுறுசுறுப்பான தொழில்-அமைதியான சூழல்!
செல்வந்தர்கள் ஆக இங்கே சிலர் உயிரை பணயம் வைத்து உழைக்கும் வேளையில்-
வேறு சிலர் அங்கே குறுக்கு வழியை கடைப்பிடிக்க நினைத்தனர்-
இன்னும் ரொம்பத் தூரமோ?


இன்றைக்கு நிறைய தங்கத்தை மேலேற்றி விட்டீர்கள் அங்கிள்-
இன்னும் ஓரிரு தினங்களில் சுத்தமாக வழித்து எடுத்துக்கொண்டு வந்து விடலாம் ஸ்யூ!
பிசாசுக் கப்பலும் எங்கேயோ கண்காணாமல் போய் விட்டது-நிலவரம் சாதகமாகி வருகிறது!
அதோ தெரிகிறது பார் ஹாலின் கப்பல்!
கையை வலிக்கிறது-நீ கொஞ்ச நேரம் துடுப்புபோடு!
தங்களை மீட்டு காப்பாற்றுமாறு வஞ்சகப் பேர்வழிகள் அபயக்குரல் எழுப்பினர்-
ஐயா-காப்பாற்றுங்கள்! எங்களை காப்பாற்றுங்கள்!
நில்லுங்கள் அங்கேயே! என்ன நேர்ந்தது உங்களுக்கு என்று சொல்லுங்கள் முதலில்-
ராட்சஸ சுறா ஒன்று எங்களை நாசமாக்கி விட்டது. தாகம்-தாங்க வில்லை! செத்துக் கொண்டிருக்கிறோம்!


படகில் ஆயுதம் ஏதாவது வைத்திருக்கிறீர்களா?
இல்லை! இந்த உடைந்த துடுப்புதான் இருக்கிறது! படகுகூட ஓட்டை விழுந்து விட்டது!
அதிர்ஷ்டம்தான் எங்களை உங்களிடம் கொண்டு வந்து சேர்த்திருக்கிறது!
ஆல்ரைட்! வெறும் கையோடு மேலேறி வாருங்கள்! ஓட்டைப் படகை மேலே ஏற்றுவதற்கில்லை அது முழ்கினால ஒன்றும் நஷ்ட மாகி விடாது!
வெகு தொலைவில்- அனாதை போல் தறிகெட்டு அலைந்து கொண்டிருந்தது பிசாசுக் கப்பல்!
பல நாட்களாக கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தோம்-உணவும், நீரும் எப்போது தீர்ந்து போனது என்று கூட நினைவில்லை!
முதலில் போய் உணவருந்துங்கள்!
ஆனால் ஒன்று! எங்கள் வேலை இங்கே முடிவடையும்வரை உங்களை கரைக்கு அனுப்ப முடியாது! இங்கேயே தங்கி எங்களுக்கு ஏதாவது ஒத்தாசை செய்ய முயற்சியுங்கள்!
ரிப்-நீ என்ன நினைக்கிறாய்?
காப்டன் ஸ்லாக் என்று நீங்கள் குறிப்பிட்ட நபரோடு இவர்களில் ஒருவனை நாம் பார்த்ததாக ஞாபகம்-இவர்களை ஏனோ எனக்கு அறவே பிடிக்க வில்லை!



ஆனாலும் அவர்களை மீட்பதை தவிர வேறு வழியில்லை தான்!
இதுவரை நல்ல படியாக நடந்து விட்டது-
ஸ்லாக் வந்து சேரும் வரை விழிப்போடு காத்திருப்போம்!
அந்த அந்நியர்களை எனக்குப் பிடிக்கவில்லை ரிப்-என்ன செய்யலாம்?
தொடர்ந்து அவர்கள் மீது ஒரு கண் வைத்திருக்க வேண்டியது! கூடியவரை சீக்கிரமாக வேலையை-முடித்துக் கொண்டு துறைமுகம் போய் சேரவேண்டியது-
ப்ளின்ட்டும், ஜோவும் ஹாலின் கப்பலை சென்றடைந்திருப்பார்களா?
ஷ்யூர்! இல்லையேல் இந்நேரம் திரும்பி வந்து சேர்ந்திருப்பார்கள்! ஹால் தங்கத்தை மீட்கும் பணியை மேற்கொண்டிருக்கக் கூடும்-இத்தனை நாள் ஒரே இடத்தில் நிற்க வேறு காரணம் இருக்க முடியாது!



மறுநாள்-தங்கத்தை மீட்கும் பணி முற்றுப் பெற்றது!
கங்கிராட்ஸ்-ஹால்!
ஒன்று மிஞ்சாமல் அத்தனை பாளங்களையும் அள்ளி வந்துவிட்டோம் என்று நம்புகிறேன!
நன்றி ரிப்! உன் உதவி இல்லையேல் இதை நான் சாதித்திருக்கவே முடியாது!
இவர்களிடமிருந்து தங்கத்தை பிடுங்க இதுதான் ஏற்ற தருணம்!
ஸ்லாக் ஏன் இன்னமும் வந்து சேரக் காணோம்?
மோப்பம் பிடித்தே வந்து சேர்ந்து விடுவார் பார்!
பிளின்ட் சொன்னது சரியாகி விட்டது.
வா-போகலாம்! நம் ஆட்களையும், ஹாலின் தங்கத்தையும் மீட்க இதுதான் தக்க சமயம்!
அதோ ஹாலின் கப்பல்! ரைபிள்களை உயர்த்துங்கள்!


ஹால்-மரியாதையாக சரணடைந்து விடு!
ஆனால் பதிலடி கொடுக்க தீர்மானித்தார் ஹால்!
திருட்டுப் பயல்களிடம் அள்ளிக் கொடுக்கவா இவ்வளவு கஷ்டப் பட்டு தங்கத்தை சேகரித்தேன்?
ஜோ - இது தான் தருணம்!
கொஞ்சம் பொறுங்கள்! ஆயுத பிர யோகம் என்று வந்தால் நாம் தோற்றுவிடுவோம்!
அவர் சொல்வதைக் கேள் ஹால்! துப்பாக்கியை போடு கீழே!
டுமீல்
சண்டாளா-!


அங்கிள்! ஓ ரிப்- இவருக்கு காயம் பட்டுவிட்டது!
யாரும் அசையக் கூடாது- ஜாக்கிரதை!
கொக்கிகளை வீசி கப்பலை வசப்படுத்திக் கொண்டனர்-
ஆயுதம் தாங்கிய விஷமிகள் ஹாலின் கப்பலுக்குள் வந்து சேர்ந்தனர்-
வேறு எவரும் காயப் படு முன் இதை நான் அப்புறப்படுத்தி விடட்டுமா?


அமோரிடா தங்கம் எங்களுக்கே சொந்தம். ஹால் அதைத் தேட ஆரம்பிப்பதற்கு வெகு காலத்திற்கு முன்பிருந்தே நாங்கள் அதில் அக்கறை கொண்டிருந்தோம்!
எங்களுடைய அக்கறை எல்லாம் இவருடைய உயிரை காப்பாற்றுவதுதான்!
இவர்கள் வசம் இருக்கும் துப்பாக்கிகளை சேகரித்துக் கொண்டு, கிரேனை பயன்படுத்தி இங்குள்ள தங்கத்தை நம் கப்பலுக்கு மாற்ற ஏற்பாடு செய்!
கஷ்டப்பட்டு சம்பாதித்த பொக்கிஷம் கண்ணிமைக்கும் பொழுதில் அநியாயமாக கைமாறிக் கொண்டிருந்தது-
என் நெடுநாள் கனவு இன்று ஈடேறிவிட்டது!
கப்பலின் எஞ்சின் அறைக்கு ஒரு கோடாரியை எடுத்துக்கொண்டு போ-இவர்கள் இங்கிருந்து சுலபத்தில் கிளம்பி விடக்கூடாது!
அவனுக்கு பெரிதாக ஆபத்து ஏதுமில்லை பெண்ணே! ஒரு பாதுகாப்பு நடவடிக்கையாக உன்னையும் எங்களோடு அழைத்துப் போகப் போகிறேன்! நட!
விடுடா என்னை!



அதுதான் தங்கத்தை எடுத்துக் கொண் டாயே-ஸ்லாச்! இந்தப் பெண்ணை விட்டு விடு!
நெருங்காதே-இல்லையேல், உன்னையும் சுட்டுவிடுவேன்!
எங்களுக்கு உங்களால் தொல்லை ஏதும் வராவிட்டால் சீக்கிரமே இவளை திருப்பி அனுப்பி விடுவேன்!
புயல் வரப்போகும் அறிகுறியாக மேகங்கள் திரள் திரளாக கூடிக் கொண்டிருந்தன-
பிணைக் கைதியாக ஸ்யூவையும் உடன் அழைத்துச் சென்ருன் ஸ்லாக்-
அயோக்கிய ராஸ்கல்-அவனை கடுத்து நிறுத்த ஏதாவது செய்ய முடிந்தால்
திரும்பித் தாக்க இதுவல்ல தருணம் டெஸ்மாண்ட்! பொறுமையோடு காத்திருப்பதுதான் விவேகம்!
தான்தோன்றித் தனமாக அலைந்துகொண்டிருந்த பிசாசுக் கப்பலை சூருவளி தாக்கியது-


விஷமய் பண்ண எண்ணாமல் அமைதியாக இரு· அதுதான் உனக்கு நல்லது.
என் அங்கிளை கவனிக்க என்னை நீ அங்கேயே விட்டு வந்திருக்க வேண்டும்!
ஹ்ம்ம்ம்·பட்ட கஷ்டமெல்லாம் வீண்!
·சுழன்றடித்த சூறாவளிகாரணமாக வேகம் எடுத்து ஓடத் தொடங்கியது பிசாசுக் கப்பல்-
வந்த வேலை சுலபமாக முடிந்தது! இனி பத்திரமாக ஊர் போய்ச் சேரும் வழியைப் பார்ப்போம்!
பழி வாங்கும் ஆவேசத்தோடு வருவது போல் படு வேகமாக நகர்ந்து வந்து கொண்டிருந் தது பிசாசுக் கப்பல்.


காயத்தின் மீது விரலை அழுத்தியே வைத்திரு டெஸ்மாண்ட்-நான் போய் இயந்திரம் என்ன நிலையில் இருக்கிறது என்று பார்க்கிறேன்.
ஆகட்டும்-ஸார்!
அடித்து நொறுக்கப்பட்டிருக்கிறது! நங்கூரமிட்ட நிலையிலேயே இருப்பதுதான் நல்லது! ஆனால் ஸ்யூவை காப்பாற்ற வழி?
அந்த பிசாசுக் கப்பல் எப்போதோ மூழ்கிப் போயிருக்கும் என்றல்லவா நினைத்தேன்!
அந்தக் கப்பல் நம்மை தாண்டி விலகிச் செல்லட்டும்-
அதுவரை சற்று ஒதுங்கியே இரு!
ஊர் போய் தங்கத்தை எடை போட்டுப் பார்க்க துடிக்கிறது என் நெஞ்சம்.
உன்னை ஸ்வார்ட்ஸ் பாயிண்ட்டில் இறக்கிவிட்டு வருகிறேன். உன் அங்கிள் அங்கே வரும்போது நீ அவரோடு சேர்ந்து கொள்ளலாம்-
அவரை நீ கொன்று விடாதிருந்தால்!
அலைகளினால் அலைக்கழிக்கப்பட்ட பிசாசுக் கப்பலின் சக்கரம் கட்டுக்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முற்பட்டது-


கட்டுப்படுத்த எவரும் இன்றி!
கட்டு தளர்ந்ததும் சுதந்திரம் பெற்றுவிட்ட கப்பல் பாய்ந்து முன்னேறியது-
நெருக்கடி உருவானது-
ஐயோ-அந்த பிசாசுக் கப்பல் நேராக நம்மை நோக்கி வருகிறது பார்!
விலகு அப்பால்-லாவக மாக கப்பலை விலக்கி ஓட்ட முயற்சிக்க வேண்டும்!
ஸார்-எதிரிகளுடைய கப்பலை பாருங்கள்!
பழி வாங்கும் வெறியோடு சீறி வந்தது பிசாசுக் கப்பல்!


எதிரிகளின் கப்பல் மீது விசையோடு மோதியது பிசாசுக் கப்பல்-
ஐயோ-ஸ்யூவும் அல்லவா சேர்ந்து மாட்டிக் கொண்டாள்!
தூக்கி எறியப்பட்ட ஸ்யூ கடலுக்குள் விழுந்தாள்.
ஆ-வ்!
கொண்டு வா-அதை சீக்கிரம்!
நீர் மூழ்கி உபகரணங்களை மாட்டிக் கொண்ட ரிப் கிர்பியும் நீருக்குள் பாய்ந்தார்-


கப்பல்கள் மோதிக் கொண்ட அதிர்ச்சி யில் பாதி நினைவிழந்து போயிருந்த ஸ்யூ அலைகளின கீழே நீரினுள் அமிழலானாள்-
அதோ - ஸ்யூ!
இன்னும் சற்று தாமதமாகி யிருந்தாலும் காப்பாற்ற முடி யாது போயிருக்கும்!
நிஜமாகவே அது ஒரு பிசாசுக் கப்பல்தானோ என்று எண்ண வைக்கும்படியாக இருந்து அது செய்து முடித்த காரியம்-
எதிரிகளின் கப்பலும் அம்பேல் !
சீக்கிரம் மேலே கொண்டு போக வேண்டும்!
ஸ்யூ-? ஸ்யூ-?
அதோ-வந்து விட்டார்கள்!


பயப்படாதே-இனி ஆபத்தில்லை!
ஓ-ஓ-!
மயக்கம் மெள்ளத் தெளிந்து வருகிறது-
ஹாலின் கப்பல் அங்கிருந்து நகரத் தொடங்கியது!
எஞ்சினை ஒருவாறாக இயக்கிவிட்டேன் டெஸ்மாண்ட் ஸ்லாக் கும்பலை சேர்ந்த எவனாவது தலை நீட்டுகிறானா என்று விழிப்போடு கண்காணித்துக் கொண்டிரு!
சரி-ஸார்!
ஆனால்-அவ்விரு கப்பலும் மோதிக் கொண்ட விதத்தைப் பார்த்தால் அவர்களில் எவருமே தப்பிப் பிழைத்திருக்க வாய்ப்பில்லை!
அமோரிடா தங்கம் கடல் படுகையில் முன்னைவிட இப்போது மிகப்பரந்த பரப்பில் சிதறிவிட்டது!


பின்னர்-
நம் பயங்கர அனுபவத்தை பட்லர்கள் கிளப்பில் அப்படியே சொல்லி வியப்பில் ஆழ்த்தப் போகிறேன் ஸார்-
'அப்படியே' சொல்-! ரீல் விட நினைக்காதே
துப்பாக்கியை நீட்டியபடி நின்ற எனக்கு எதிரே அப்படியே உறைந்து போய் நின்றார்கள் அந்த டஜன் கடல் கொள்ளைக் காரர்களும்!
அட டே!
அடேங்கப்பா! அப்படியா?
அமோரிடா தங்கத்தை மீட்க மறுபடியும் முயற்சி செய்யப் போகிறீர்களா ஹால்?
தனக்கே உரிமையான பொக்கிஷத்தை கடல் மீண்டும் சொந்தமாக்கிக் கொண்டு விட்டது ரிப்!
அந்த ஆபத்திலிருந்து தப்பிப் பிழைத்தேனே-அது போதும் எனக்கு!
என்னை காப்பாற்றிய நபருக்கு நான் நன்றி சொல்ல வேண்டியது கடமையல்லவா?
ஏய்-மெள்ள!
முற்றும்

# வாசகர் கடிதம்!

● ஏ. வி. பிரசாந்த், மடிப்பாக்கம், சென்னை-91.

''மாம முகமூடி'' தொடக்கம் முதல் இறுதி வரை செம விறுவிறுப்பு' திடீர் திருப்பங்களும், எதிர்பாராத முடிவும் ஏ-ஒன்-ரிப்லியின் ''நம்பினால நம்புங்கள்'' பகுதி பயனுள்ளதாக இருந்தது.

● K. விஸ்வா, ஆரணி.

சி. ஐ. டி. ரிப் கிர்பியின் புதிய கதைகளை ஆவலோடு எதிர்பார்க்கிறேன! என அபிமான ஹீரோவான ஸ்பைடரை சீக்கிரம் வெளியிடுங்கள்!

● M. பிரபாகரன், கோத்தகிரி.

''மர்ம முகமூடி'' அருமையான தொரு துப்பறியும் கதை! அழகான படங்களோடு கதை பின்னப்பட்டிருந்த விதம் தூள்!

● A. ரவி, அருப்புக்கோட்டை.

''மர்ம முகமூடி''யைப் படித்தவுடன் அட்டகாசமான இங்கிலீஷ் படத்தைப் பார்த்த திருப்தி ஏற்பட்டது! மற்ற எல்லா பத்திர்க்கைகளும் விலையைக் கூட்டி வரும் போது-நீங்கள் இன்னமும் அதே விலையில் வெளியிடுவது பாராட்டத்தக்கது.

● D. விஸ்வநாத், ஆவடி.

தாமரை மலர சூரியன் வேண்டும்.
அல்லி மலர சந்திரன் வேண்டும்.
அடியேன் மலர லயன் காமிக்ஸ் வேண்டும்!



## மின்னல் மனிதன் மேனிக்ஸ்!

**''ஸ்மோக்''** என்பது ஒரு பயங்கரவாதக் கும்பல்! வன்முறை உலக நாடுகளை சீரழித்து பணம் ஈட்டும் வெறிபிடித்து அலைந்தது அந்தக் கும்பல்! அவர்களை முறியடிப்பதற்கென்றே உருவாக்கப்பட்ட பிரிட்டிஷ் உளவுப் படையின் விசேஷ ஆயுதம்தான் **''மின்னல் மனிதன் மேனிக்ஸ்''!** கம்யூட்டர் மூளை கொண்ட ரோபோவான மேனிக்ஸ் அசாத்திய சக்தியும், செயல் வேகமும், கொண்டது! 'ஸ்மோக்கை' பூண்டோடு வேரறுக்க ஒரு புதிய திட்டம் தயாராகி வந்தது!



இங்கிலாந்தின் தென் பகுதியில் ஒரு இராணுவ விமான தளத்தில், புறப்பட ஆயத்தமாக இருந்த ஒரு விமானத்தினுள்ளே, தேர்ந்தெடுக்கப்பட்ட திறமைசாலிகள் சிலர் இரகசிய ஆலோசனையில் ஈடுபட்டிருந்தனர்-
இப்போது உங்களுக்கு நான் மேனிக்ஸை அறிமுகம் செய்து வைக்கப் போகிறேன்!
மேனிக்ஸ் பற்றிய விபரங்களை இப்போது கேட்டறிந்து கொண்டீர்கள்! நாம் மேற் கொள்ளப் போகும் அதிரடி நடவடிக் கைக்கு மேனிக்ஸ்தான் குழுத் தலைவர்.
வித்தியாசமான ஒன்றை நீங்கள் சந்திக்கப் போகிறீர்கள் என்று சொன்னார்கள், ஆனால் அது இப்படிப்பட்ட ஒன்ருக இருக்கும் என்று-
ஒரு ரோபோ! என்னால் நமபவே முடியவில்லை!
மேனிக்ஸ மிச்சத்தை நீயே சொல்!


கரீபியனில் உள்ள டோகா என்னும் தீவு இது. அதனருகில் பிரம்மாண்டமான கிடங்கு ஒன்று உண்டு. அதற்குள் ஸ்மோக் கும்பலின் நம்பர்-1 பாசறை! நம் கூட்டாளிகளை இரண்டு கூட்டங்களாக பிரிக்கலாம். முதல் கூட்டம் கடத்தப்பட்ட அணுசக்தி சப்மரைன்களை மீட்பது!
இரண்டாவது கூட்டம் ஸ்மோக் கும்பலின் டைரக்டர் க்ரொட்டலியை கைது செய்து, இரகசிய பாசறையை தகர்த்து தரைமட்டமாக்குவது!
மறுநாள் காலை டோகா தீவை நெருங்கிக் கொண்டிருந்தது ஒரு பிரிட்டிஷ் கப்பல்
நம் பங்குப் பணி இங்கே முடிவடைகிறது என்று மேனிக்ஸுக்கு தெரிவி!
மேனிக்ஸும் அதன் சகாக்களும் மளமளவென்று காரியத்தில் இறங்கினர்-


விரைவிலேயே அவர்களுக்கு
எதிரே பெரும் பிளவு
ஒன்று தென்பட்டது.
அதே சமயம் பேராபத்தும்
அவர்களை எதிர் கொண்டது!
பயங்கர மோதல்.
ஸ்மோக்கின் கண்காணிப்பு படை
ஆசாமிகள் ஆக்ரோஷமாக
தாக்கத் தொடங்கினார்கள்!
ஆனால் மேனிக்ஸிடம் அவர்களுடைய
பாச்சா பலிக்குமா?


போய் தகவல் சொல்ல ஒருவன் தப்பியோடுகிறான்! ஈட்டி எறியும் துப்பாக்கியின் திறன் வரம்புக்கு அப்பால் போய் விட்ட அவனை மடக்க-
மேக்ஸின் ஆற்றல் ஈடிணையற்றதாயிற்றே!
இதுவரை வெற்றி நமக்குத்தான்! என்றாலும் பாசறையினுள் நாம் மிகுந்த எச்சரிக்கையோடு நுழைய வேண்டும்!


ஸ்மோக் ஹைஜாக் செய்த பிரிட்டிஷ் சப்மரைன்-அதோ!
அதை முதலில் கைப் பற்றுவோம் காப்டன்!
ஸ்மோக் காவலர்கள் நொடியில் வீழ்த்தப்பட்டனர்-
உங்களுடைய உதவியாளர்களை சப்மரைனுக்டிள் அழைத்துப் போங்கள் காப்டன் - எதிரிகளை நான் கவனித்துக் கொள்கிறேன்!
ஆவ்வ்வ்!



மின்னல் வேகத்தில் செயல்பட்டடது மேனிக்ஸ்!
வெடிகுண்டு-
ஆஆஆ!
மறு நிமிடம்-
கமாண்டர் பேர்ட் நான்! உங்கள் அருகிலேயே இருந்து தேவையான ஒத்தாசைகளை செய்ய வேண்டும் என்று எங்கள் நால்வருக்கும் உத்தரவு-மேனிக்ஸ்!
கமாண்டர்-உங்களுக்குப் பின்னால்.


விபரமறிந்த நால்வரின் ஒத்துழைப்பு- நல்ல ஏற்பாடுதான்!
டட்
டட்
ரட்
ஆஆஆ!
ஆல்ரைட்- வாருங்கள் என்னோடு!
'கான்ஜெர்' தப்பிச் செல்ல வேண்டுமானால் மேலே நிலைகொண்டுள்ள ஐந்து பீரங்கிகளையும் முதலில் நாம் தீர்த்துக்கட்ட வேண்டும்! அவற்றை அழிக்கும் பொறுப்பு என்னுடையது- வேறு எதிர்ப்புகள் தோன்றினால் அவற்றை முறியடிக்க முயற்சியுங்கள்!


போலீஸ்காரன்கள்! சுடுங்கள்!
கை வெடி குண்டு இரு வினாடி ப்யூஸ் கொண்டது!
ஐய்-யோ!
பூம்!
சுடுவதை நிறுத்தாதீர்கள் கமாண்டர்!
ரட்-டட்-டட்!


ஹே-என்ன ஒரு பாய்ச்சல்! அந்த ஆசாமி அட்டகாச மான பேர்வழிதான்!
வாயைப் பிளக்காமல் வேலையை கவனிடா-முட்டாள்!
ஆவ்வ்வ்!


கண்ட்ரோல் அறையில் ஸ்மோக் குழுவின் டைரக்டர் க்ரெட்டெல்-
சந்தேகமில்லை-இது மேனிக்ஸ்தான்! ஆக, நம்முடைய ரோபோ அழிக்கப்பட்டுவிட்டது ஊர்ஜிதமாகிறது! தொலைகிறது! நமக்காக இன்னொரு ரோபோவை அனுப்பி வைத்திருக்கும் பிரிட்டிஷாருக்கு கடமைபட்டவர்களாவோம்! கூப்பிடு-அழிவுப்படையை!


ஹலோ டைரக்டர்! சப்மரைனுக் குள்ளே பிரிட்டிஷ்படை ஆசாமி ஒருவன் நுழைந்து கொண்டு விட்டான். அதன் திறப்பை திறக்க முடியவில்லை - எஞ்சின் இயக்கப்பட்டு விட்டது!
கான்ஜெர் தப்பிச் செல்வதை அனுமதிக்கலாகாது! தடுத்து நிறுத் துங்கள். நஷ்டத்தைப் பற்றி கவலைப்படாமல்!


கேட்டாயல்லவா- தலைவியின் உத்தரவை? நேரே போய் மோதுவது ஒன்றுதான் வழி-கிளப்பு!


நாசகாரிப் படகை கவனியாத மேனிக்ஸ் பிரங்கிகளை நாசம் செய்வதில் கவனமாக இருந்தது.
இன்னும் ஒரே ஒரு பீரங்கி பாக்கி- அதை அழிக்காமல், வசப்படுத்தி னால் உபயோகப்படலாம்!
க்ராக்!
ரேர்-ரோ-போ-அது!


இந்தக் கத்தியினுல் என்ன கிழிக்கப் போகிருய் நீ?
உங்களுடைய பீரங்கிகளே என்னை எதுவும் செய்ய முடியாமல் தோற்றுவிட்ட பிறகு?-
கீழே-பிரிட்டிஷ் வீரர்கள் ஸ்டோர் ஷெட்டை வசப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்-
அங்கே மேனிக்ஸ் ஏதோ சாதித்துக் கொண்டிருக்கிறது!
ஷெட் இனி நம்முடையது- காப்டன்!
இந்த மனிதர்களின் பேதமையை என்ஞல் புரிந்து கொள்ளவே முடியவில்லே!
ஆவ்வ்!



அதோ-சப்மரைனை நகர்த்துகிறார்கள் நம் தோழர்கள்!
ஆனால் எதிரிகளின் லாஞ்ச் சப்மரைனில் போய் மோத விரைகிறது பார்!
இப்படி ஒரு அசம்பாவிதத்தை எதிர்பார்த்தே இந்த பீரங்கியை அழிக்காமல் வசப்படுத்திக் கொண்டேன்-
இதோ-ரெடி!
போ-இன்னும் வேகமாக! துறையை விட்டு அது வெளியேறவே கூடாது!


டூம்!
டமால்!
சிதைந்து போன லாஞ்ச்சை விலக்கிக் கொண்டு முன்னேறியது 'கான்ஜெர்' லாஞ்ச்சை பற்றிக்கொண்ட தீ சப்மரைனையும் விழுங்கிவிடுமோ?


ஒரு சில வினாடிகளுக்குப் பின் கான்ஜெரும் உருக்குலைந்த லாஞ்ச்சும், ஏக காலத்தில் நீரினுள் மூழ்கத் தொடங்கின-
முன்னது சுதந்திரத்தை நோக்கி-மற்றது தன் சமாதியை நோக்கி!
இனி ஆபத்து இல்லை!
முதல் கட்டம் முழு வெற்றி! இனி ஸ்மோக்கின் டைரக்டர் க்ரெட்டெலை வளைத்துப் பிடிக்கும் பணி மட்டுமே பாக்கியிருக்கிறது!



ஸ்மோக் கண்ட்ரோல் அறையில்-
சப்மரைன் தப்பிச் சென்றுவிட்டது டைரக்டர்!
ஆனால் ரோபோவும் அதன் சகாக்களும் தப்ப முடியாது-அவர்களை அழிக்குமாறு நம் வீரர்களுக்கு தகவல் கொடு!
துறைமுக பகுதியிலிருந்து பலமாக தாக்குகிறார்கள் மேனிக்ஸ்-நீ உதவி செய்ய இயலுமா?
ஆவ்!
ரட்..டட்..டட்
பீரங்கித் தளத்திலிருந்தது மேனிக்ஸ்-
ஓ-ஷ்யூர்!


அப்போது திடீரென்று-
உன் அட்டகாசம் இனியும் செல்லாது மேனிக்ஸ்!
டமால்
ஓ-ஸ்மோக் ஆட்கள்-
எங்களுடைய ஸோனிக் அழிவு அலைகள் உன்னை இயங்க முடியாமல் பண்ணி விடும் ஆற்றலுடையவை!
அந்தக் கருவியிலிருந்து வெளிப்படும் கதிரலைகள் என் கம்ப்யூட்டர் மூளையையும், மோட்டார் சாக்யூட்டுகளையும் செயலிழக்கச் செய்கின்றன
ரோபோ இனி நமக்கு அடிமை!
நா-நா-ன் எதுவும்-செய்வ-தற்-கில்லை-


மேனிக்ஸின் துப்பாக்கி சொத்தென்று கீழே விழுகிறது-மேலே ஏதோ விபரீதம்! கொக்கியை எறி-மேலே!
போய் பீரங்கித் தளத்தின் விளிம்பில் மாட்டிக்கொண்டது கொக்கி-
தொடர்ந்து சுடுகிறார்கள்- ஆனாலும் மேனிக்ஸுக்கு என்ன ஆயிற்று என்று உடனடியாக கண்டறிய வேண்டியது அவசியம்.


மேனிக்ஸை நகர முடியாமல் பண்ணி விட்டோம் டைரக்டர் இனி மற்றவர்களை சுலபமாக வீழ்த்திவிடலாம்!
தப்புக் கணக்கு போடுகிறாய் தம்பி!
ஸோனிக் அழிவுக் கதிரலைக் கருவியை இதோ நொறுக்கித் தள்ளிவிட்டேன்!



மேனிக்ஸ்-எப்படி இருக்கிறாய்?
செயல் திறன் மீண்டுவிட்டது - முழு அளவில்!
நன்றி- தோழனே!
கீழே நின்ற கடைசி சகாவையும் மேலே ஏற்றினர்.
அடுத்த கட்ட நடவடிக்கை என்ன-மேனிக்ஸ்?
கரோட்டலை தேடிப்பிடித்து கைது செய்ய வேண்டும். அவளிடமிருந்து கறக்கும் உண்மைகளை பயன படுத்தி ஸ்மோக் கும்பலை வேரறுக்க முடியும் என்று நம்புகிறது நம் மேலிடம்.
இரகசிய கதவு ஒன்று திறந்து கொள்ள சுரங்கப்பாதை ஒன்று கீழிறங்கியது.
என்னைத் தேடித்தான் வருகிறார்கள்!
வாருங்கள் டைரக்டர்- தப்பியோடி விடலாம்!
இப்படியொரு இரகசிய வழி இருப்பது தெரியாது அந்த முடர்களுக்கு!


உள்ளே நுழைந்த பிரிட்டிஷ் படைக் குழுவினர் எதிரிகளை அதிரடியாகத் தாக்கினார்கள் -
ஆவ்வ்-!


அந்தச் சண்டாளி இங்கே இல்லை மேனிக்ஸ்!
நெருக்கடி ஏற்பட்டாலும் கடைசி நிமிடம் வரை இங்கே பொறுப்பில் இருக்க வேண்டிய கடமை அவளுக்கு உண்டே!
நம்மை அவள் தாண்டிக் கொண்டு செல்ல வில்லை. எனவே, வெளியேற வேறொரு வழி இங்கிருக்க வேண்டும்! என் X-ரே பகுதியை இதோ இயக்கிவிட்டேன்-
அந்த சுவரின் பின்னால் சுரங்கப் பாதை ஒன்று உள்ளது!
சக்தியை உச்சமாக்கி ஒரு மோதல் மோதினால் இந்தச் சுவர் தூள் தூள்!



க்ராஷ்!




அதென்ன சப்தம்? மேனிக்ஸ் இரகசிய பாதையை தெரிந்து கொண்டதா என்ன?
வேகமாக ஓடி வாருங்கள் டைரக்டர்! பிரிட்டிஷ் ஆட்களிடம் நீங்கள் அகப்பட்டுக் கொண்டு விடலாகாது!


என்ன ஒரு பாய்ச்சல்-
பாருங்கள் காப்டன்!
ஆறுல்-மேனிக்ஸின் வேகத்திற்கு
ஈடு கொடுக்க யாரால் முடியும்!
நாம் செய்த அதிர்ஷ்டம்-
மேனிக்ஸ் நம் கட்சி!
அவளை உயிரோடு பிடிக்க வேண்டும்
என்பது உத்தரவு எனவே, தற்கொலை
மாத்திரையை அவள் விழுங்க நான்
வாய்ப்பு கொடுக்கக் கூடாது!
மயக்க ஊசி-
அதோ-மேனிக்ஸ்!
முட்டாளே-தோட்டாக்கள்
அவனிடம் செல்லுபடி
யாகாது!


பட்!
ஆஆ-!
ஊஹூம்-இவளை நீ உயிரோடு கொண்டு செல்ல முடியாது! நான் முந்திக்கொண்டு கொன்று விடப் போகிறேன்!
தப்புக் கணக்கு!
மேனிக்ஸின் மின்னலை மிஞ்சிய செயல் வேகம் தோட்டாவையும் தோல்வி யுறச் செய்தது-
அ-ஹ்!
என்ன ஆயிற்று?
வெறும் மயக்கம்தான்!


மறுபடியும் மேனிக்ஸின் X-ரே பகுதி இயங்கியது.
சுவரின் மறுபுறம் விசைப் படகு ஒன்று தயார் நிலையில் உள்ளது- இதோ இங்கே இருக்கிறது ஒரு இரகசிய திறப்பு!
ஆயிற்று!
மிஞ்சி நிற்கும் ஸ்மோக் ஆட்கள், க்ரெட டெலே உயிரோடு கடத்திச் செல்வதை தடுக்க எதையும் செய்யத் தயங்க மாட்டார் கள் எனவே, இறுதிக்கட்ட மோதல் ஒன றுக்கு தயர்ராக இருங்கள் தோழர்களே!


படகை உச்ச வேகத்தில் கிளப்புங்கள்!


நம் டைரக்டர் அந்தப் படகில் சுயவுணர்வற்ற நிலையில் கிடக்கிறார்-
சுட்டுத் தள்ளு- அனைவரையும்!
ஆ ஆ ஆ!
துப்பாக்கிகளை உயர்த்துகிறார்கள்- பார்!
பிரிட்டிஷ் படை வீரர்களின் துப்பாக்கிகள் முந்திக் கொண்டு முழங்கின-
ஆவ்வ்வ்-!
அஹ்!
வழியில் எதிரிகளின் எண்ணெய் சேமிப்பு கிடங்கு இருப்பதை கண்டு கொண்டது மேனிக்ஸ்-
க்ரெட்டெல் நம் வசம் வந்துவிட்டபின், இனியும் அடக்கி வாசிக்க வேண்டிய அவசியம் இல்லை! இறுதிக் கட்ட நட வடிக்கையை முழு வீச்சில் மேற் கொள்ள இதுவே தருணம்-
15 வினாடி ப்யூஸ் கொண்ட வெடிகுண்டு-


வெடிகுண்டு! ஐயோ-அது பெட்ரோல் கிடங்கில் வெடித்ததோ-தொலைந்தோம்!
தொப்!



குகைப் பாதையினுள் போய்க் கொண்டிருக்கிறோம்- குண்டு வெடிக்க இன்னும் எட்டு விநாடி அவகாசமே உள்ளது படகை வேகமாக செலுத்துங்கள்- இன்னும் வேகமாக-!
இதோ! எடுத்து விட்டேன் கையில்!
சீக்கிரம் ! சீக்கிரம் அதை தூர எறி-!
ஆனால்-காலம் கடந்துவிட்டது!
டூம்-டூம்!


எண்ணெய் தொட்டிகள் படு பயங்கரமாக
வெடித்து நாசத்தை ஏற்படுத்தின.




பிரகாஷ் பப்ளிஷர்ஸ் நிறுவனத்தின் சார்பாக லயன் காமிக்ஸை வெளியிடுபவரும், ஆசிரியரும்: S. விஜயன். முகவரி: பிரகாஷ் பப்ளிஷர்ஸ், த. பெ. எண்: 374, சிவகாசி - 626 123. போன்: 21159. அச்சிட்டோர்: தி விஜய் புக்ஸ், சிவகாசி 626 123. வெளியீடு எண்: 78

முற்றும்.


அடுத்த வெளியீடு!
C.I.D. சிப் கிர்பி தோன்றும்
Operation அலாவுதீன்!
லயன் காமிக்ஸ்
ரூ. 3/-
புத்தம் புதிய சஸ்பென்ஸ்

ரூ.5000 பரிசு!

போட்டியின் கடைசிப் பகுதி!



விபரம் உள்ளே!

